தமிழ் முரசு
TAMIL MURASU
VOICE OF THE COMMUNITY
ஞாயிறு 4.12.2011

முரசொலி

# தாய்மொழியாம் தமிழை வளர்ப்போம்; காப்போம்

தாய்மொழியைப் பேணிக் காப்பது என்பது தாயைப் பேணிக் காப்பதற்கு ஒப்பானது என்று நமது முன்னோர்கள் சொல்லக் கேட்டிருக்கிறோம். அந்த அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்தது தாய்மொழியிடம் நாம் காட்டும் பற்று.

இந்த உண்மையை 40–45 ஆண்டுகளுக்கு முன்பே நன்கு உணர்ந்த நமது முன்னாள் பிரதமர் திரு லீ குவான் இயூ, பள்ளிகளில் தாய்மொழி இரண்டாம் மொழியாகக் கற்பிக்கப்படவேண்டும் என்று உத்தரவிட்டார். அன்று முதல் பள்ளிகளில் தாய்மொழிக் கல்வி முக்கிய அம்சமாக விளங்கி வருகிறது.

ஆனால், இன்றைய நவீன காலத்தில் ஆங்கில மொழியின் ஆதிக்கம் அதிகரித்து வரும் வேளையில் பிள்ளைகள் வீட்டில் தாய்மொழியில் பேசுவது குறைந்துகொண்டே வருகிறது என்பது அனைவரும் அறிந்த உண்மை.

இந்த நிலையை இப்படியே விட்டுவிட்டால், சில ஆண்டுகளில் வீட்டில் தாய்மொழியின் புழக்கம் இல்லாமலே போய்விடும் என்ற அச்சமும் நம்மை வாட்டுகிறது.

இதற்கு ஒரு சிறந்த தீர்வாக அமைந்துள்ளது பிள்ளைகள், மழலையர் மற்றும் பாலர் வகுப்புகளில் படிக்கும்போதே அவர்களுக்குத் தாய்மொழி கற்பித்தலைத் தொடங்கும் திட்டம். இந்த நல்விதையை கடந்த திங்கட்கிழமை நட்டுவைத்துள்ளார் இன்றும் தாய்மொழிக் கல்விக்கு அதிமுக்கியத்துவம் கொடுத்து வரும் திரு லீ குவான் இயூ.

இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த புதிய நிதி ஒன்றையும் திரு லீ தொடங்கி வைத்துள்ளார். அது மட்டுமின்றி அந்த நிதிக்கு தமது சொந்த பங்களிப்பாக 10 மில்லியன் வெள்ளியையும் வழங்கியுள்ளார்.

திங்கட்கிழமை வெளியிடப்பட்ட "என்னுடைய வாழ்நாள் சவால்: சிங்கப்பூரின் இரு மொழிக் கல்விப் பயணம்" எனும் தலைப்பிலான திரு லீயின் கையெழுத்திடப்பட்ட புத்தகங்கள் மூலம் மேலும் இரண்டு மில்லியன் வெள்ளியை அவர் திரட்ட எண்ணியுள்ளார். மீதமுள்ள 38 மில்லியன் வெள்ளியைத் தமது சொந்த முயற்சியில் பாலர் பள்ளிகளில் தாய்மொழிக் கல்வி நிதிக்குத் திரட்ட உறுதி அளித்துள்ளார்.

50 மில்லியன் வெள்ளி நிதி வரை, திரட்டப்படும் ஒவ்வொரு வெள்ளிக்கும் ஈடாக அரசாங்கமும் அதே தொகையை வழங்க முன் வந்துள்ளது உற்சாகம் அளிக்கிறது. திரு லீயின் மூன்று பிள்ளைகளான பிரதமர் லீ சியன் லூங், திரு லீ சியன் யாங், டாக்டர் லீ வெய் லிங் ஆகியோரும் தங்கள் பங்கை இந்த நிதிக்குச் செலுத்த உள்ளனர்.

அத்துடன் சிங்கப்பூரின் பெரும் புள்ளிகள் சிலரும் நிதி வழங்க முன் வந்துள்ளனர்.

ஆக, 100 மில்லியன் வெள்ளி நிதி பிள்ளைகளின் தாய்மொழிக் கல்வி மேம்பாட்டுக்குச் செலவிடப்படவுள்ளது. தாய்மொழி கற்பித்தலுக்குத் தேவையான உபகரணங்கள், தாய்மொழி கற்பிக்கும் ஆசிரியர்களுக்குத் தேவையான நிபுணத்துவ பயிற்சி அளித்தல் போன்றவற்றுக்கும் இந்த நிதி பயன்படுத்தப்படும்.

பாலர் பள்ளி பருவத்திலிருந்தே நாம் ஏன் நமது தாய்மொழியான தமிழைக் கற்கவேண்டும் என்ற கேள்வி நம்முள் சிலருக்கு ஏற்படலாம். பெரும்பாலும் பொருளாதார காரணத்துக்காக அதை கற்கவேண்டிய அவசியம் இல்லை என்றாலும் தமிழர் என்ற நமது அடையாளத்தைக் கட்டிக்காக்க தமிழைக் கற்றே ஆக வேண்டும்.

தமிழரின் பண்பாடு, வரலாறு, வாழ்க்கை நெறிமுறைகள், கலை, கலாசாரம், நாகரீகம் போன்றவற்றின் வேர்கள் தமிழ்மொழியிலிருந்துதான் உருவாகிறது.

நாம் அந்த வேர்களுக்குப் பால்ய பருவத்திலேயே தண்ணீர் ஊற்றி வளரச் செய்தால்தான் அது செழித்தோங்கி பெரிய மரமாகி, தொன்று தொட்டு விளங்கி வரும் நமது அடையாளத்தைப் பலமாக பறைசாற்றும்.

ஆக, தமிழ்மொழியின் புழக்கம் பள்ளியில் மட்டுமல்லாது நமது வீட்டிலும் இடம்பிடிக்க பெற்றோர்களும் தாத்தா பாட்டிகளும் முயற்சி எடுக்க வேண்டும். பாலர் பள்ளிகளில் நம் பிள்ளைகளுக்குத் தமிழைக் கற்பிக்க ஆதரவு தருவது நமது கடமை.

தமிழ்மொழி என்ற ஆலமரம் விழுதுவிட்டு வலுவாக வளர்வதற்கு நாம் ஆற்றும் சிறிய பங்காக இது அமையட்டும்.

வாழ்க தமிழ், ஓங்கி வளரட்டும் அதன் புகழ்.